## குருநாகல் பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 05 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குருநாகல் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் செயற்பாடுகள் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

----------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய பெறுமதி கூட்டிய வரிப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 232,264 தொகை எனினும் அவை நிதிக் கூற்றுக்களில் ரூபா 449,729 ஆக காணப்பட்டமையால் செலுத்த வேண்டிய பெறுமதி கூட்டிய வரிக் கடன் கொடுத்தோர் ரூபா 217,465 இனால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டு வண்டி பெறுமதி ரூபா 19,432,945 இல் 2012 ஆண்டின் போது அகற்றப்பட்ட ரூபா 102,000 பெறுமதியான நீர் பவுசரின் பெறுமதியும், தற்போது சபையில் காணப்படாத ரூபா 347,145 பெறுமதியான குப்பை வண்டிகளின் பெறுமதியும் அடங்கியிருந்தது.

(இ) கணிப்பீட்டு சபை அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 5,935,229 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 6,346,457 ஆக காணப்பட்டமையால் நூலகப் புத்தக மீதி ரூபா 411,228 இனால் மிகையாகக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன. அதே போல் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 90,353 இற்கான அடியிதழ் புத்தக மீதியை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு தொடர்பாக சம்பள மீளளிப்பு வருமானம் எனக் காட்டப்பட்டிருந்த ரூபா 26,030,646 இற்கான பெறுமதியில் ஏனைய வருமானங்கள் என கணக்கீடு செய்யப்பட வேண்டிய உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 600,000 இற்கான செயலாற்றுகை போட்டியின் பெறுவனவும் அடங்குகின்றது. அதே போல் மீளாய்வாண்டு தொடர்பாக சம்பள மீளளிப்பு ரூபா 24,796,074 தொகை எனினும் கணக்குகளில் அவை ரூபா 25,430,646 என ரூபா 634,572 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(உ) நாட்குறிப்பு இலக்கம் 15 இன் மூலம் பலவின கடன் கொடுத்தோர் (நிர்மாண வேலை) கணக்கு மற்றும் மூலதன செலவுக் கணக்கு ரூபா 44,932,404 முறையே வரவு மற்றும் செலவு பதிவுகள் என காட்டப்பட்டிருந்த போதும், பேரேட்டில் பலவின கடன் கொடுத்தோர் நிர்மாண வேலைக் கணக்கிற்கு அப் பெறுமதி ரூபா 44,301,195 என ரூபா 631,209 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2013 செப்டம்பர் 03 திகதி தேசிய சேமிப்பு வங்கியின் நூற்றிற்கு 10.5 சதவீதத்தில் நிலையான வைப்புக்கள் என முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,000,000 இற்கான தொகைக்காக மீளாய்வாண்டிற்கான வட்டி ரூபா 105,000 இனை வட்டி வருமானத்தின் கீழ் மற்றும் வருமான கடன்பட்டோரின் கீழ் எடுத்திருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டு தொடர்பாக முத்திரைக் கட்டணம் பில் போடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 2009 ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 11,619,727 தொகையும், 2011 ஆண்டு தொடர்பாகக் கிடைத்திருந்த ரூபா 29,700,107 உம், ஆக கூட்டுத்தொகை ரூபா 41,319,834 தொகையினை மீளாய்வாண்டிற்கான முத்திரை கட்டண வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் 2010 ஆண்டு தொடர்பாக ரூபா 1,601,524 உம் 2011 ஆண்டு தொடர்பாக ரூபா 22,500,000 உம் மற்றும் 2012 ஆண்டு தொடர்பாக ரூபா 8,398,476 தொகை என மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அட்டுறுவாக காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 32,500,000 இற்கான முத்திரை கட்டண வருமானத்தினை கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் போது காணி அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டடங்களுக்கான செலவு விடயம் (இலக்கம் 309) இன் கீழ் ரூபா 2,466,295 தொகையொன்று செலவிடப்பட்டு மரளுவான உப அலுவலக கட்டடம் திருத்துவதற்காக மற்றும் வேலியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அச் செலவினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. அதே போல் மீளாய்வாண்டிற்கான எழுத்தாணை கட்டணம் மற்றும் தண்டப்பணம் என கணக்கீடு செய்திருந்த ரூபா 4,477,749 இற்கான பெறுமதியில் முன்னைய ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த நீதி மனறத் தண்டப் பணம் ரூபா 817,421 தொகையும் இதில் அடங்கியிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டு தொடர்பாக நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் ரூபா 1,434,136 இற்கான மீதி ஒன்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

1.3.2 எதிர்பாராத பொறுப்புக்கள்

-----------------------------------------

பிரதேச சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகை செலுத்த வேண்டிய ஊழியர்கள் தொடர்பாக சபையினால் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதி வரை அந் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 5,566,647 ஆக காணப்பட்டது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபாட்டு கணக்குகள்

---

மீளாய்வண்டு தொடர்காக இறுதி மீதியின் கீழ் 11 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் குறிப்பிட்ட பதிவேட்டின் பிரகாரம் நேரொத்த பெறுமதிகள் இடையே ரூபா 101,526,159 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 127,835,918 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 12,973,327 தொடர்பாக காலப்பகுப்பாய்வு சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 94,455,834 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 2,949,830 தொகை 01 வருடத்தை விட பழைய மீதிகளாகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 94,903,911 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவான பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

2 நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 25,825,051 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,896,724 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 7,928,327 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 45,988,085 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 69,730,327 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டு தொடர்பான மிகை ரூபா 2,082,809 வரை குறைந்துள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம் ஆகிய ரூபா 115,183,526 இல் நூற்றிற்கு 83 ஆகிய ரூபா 95,250,153 உம் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதி மன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம் சம்பள மீளளிப்புக்கள் ஆகிய படிகள் தன்மையுள்ள பெறுவனவுகள் அடங்கியுள்ளன. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 45,988,085 இற்கான மொத்தத் தொகையும்

கமநெகும, மகநெகும போன்ற மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளுக்காக கிடைத்த பணத்தினை அடக்கியுள்ளன.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவாகிய ரூபா 89,358,474 இல் நூற்றிற்கு 38 ஆகிய ரூபா 34,059,141 தனிப்பட்ட சம்பள செலவு ஆக காணப்பட்டதுடன் அவற்றில் நூற்றிற்கு 76 ஆக ரூபா 26,030,646 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைத்து வேறு வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவாகிய ரூபா 69,730,326 இல் நூற்றிற்கு 30 ஆகிய ரூபா 20,768,941 தொகை சபை நிதியத்தில் இருந்து மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் மீதியின் நூற்றிற்கு 70 ஆகிய ரூபா 48,961,385 தொகை கமநெகும, மகநெகும ஆகிய மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் அடங்கியுள்ளன.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

------------------------------------------------------------------

வியாபார அனுமதிப்பத்திரம், வாணிப வரி, கடைவாடகை, குத்தகை போன்ற வருமானங்கள் வெளிக்களத்தில் சேகரிப்பதற்காக குறிப்பிட்ட அதிகாரம் காணப்படவில்லை எனினும் சபையின் வருமானம் சேகரிப்பவர்களினால் வருடம் முழுவதும் வீதவரி மற்றும் வியாபார அனுமதி பத்திர வருமானமும் வெளிக் களத்தில் சேகரிக்கப்பட்டிருந்தது.

2.3.2 வீதவரி

-----------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு தொடர்பாக பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தின் அதிகாரப் பிரதேசத்தில் நிலுவை வீதவரி ரூபா 1,519,431 ஆகக் காணப்பட்டதுடன் வருடாந்த பில் போடப்பட்டவைகள் ரூபா 2,470,365 ஆக காணப்பட்டமையால் பில் போடப்பட்டவைகளில் நூற்றிற்கு 61 வீதம் நிலுவை வீதவரி காணப்பட்டது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 – 159 பிரிவுகளின் பிரகாரம் பிரதேசசபை விதிக் கோவையின் விதி 33 – 42 பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு தவறுபவர்கள் தொடர்பாக மீளாய்வாண்டு மூன்றாம் காலாண்டு வரை நிலுவை பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்த போதும், இறுதி அறிவித்தல் வழங்கி ஆதனங்களை தடை செய்வதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வெல்லவ உப அலுவலக அதிகாரப் பிரதேசம் தொடர்பாக நிலுவை வீதவரி ரூபா 3,320,612 ஆக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான பில் போடப்பட்டவை ரூபா 3,209,318 ஆக காணப்பட்டமையாக வீதவரி நிலுவை பில் போடப்பட்டவைகளில் நூற்றிற்கு 103 மாத்திரமே.

2.3.3 காணி விற்பனவு மீது வரி

------------------------------------------

காணி, துண்டுகளாக பிரித்து வரைபு அங்கீகரிப்பதன் மூலம் சபைக்கு கிடைக்க வேண்டிய நூற்றிற்கு 1 வரித் தொகையில் அங்கீகரிக்கப்பட்ட 6 வரைபுகள் தொடர்பாக ரூபா 598,460 தொகை ஒன்று மீளாய்வாண்டின் இறுதிவரை கிடைத்திருக்கவில்லை.

2.3.4 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

---

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 544,331 ஆகும்.

2.3.5 மிகை விதிப்பு

---

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சட்டத்தின் பிரிவு 172(3) ஏற்பாடுகளின் கீழ் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் விதிக்கப்பட்ட மிகை விதிப்புகளின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மிகை விதிப்புகளின் பெறுமதி ரூபா 95,000 ஆகும்.

3 செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த வீதி விளக்குகளின் எண்ணிக்கை 2250 ஆக காணப்பட்டதுடன் அவ் வீதி விளக்குகளில் பராமரிப்புக்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 2,947,875 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது மதிப்பீட்டு கிரயம் ரூபா 5,500,000 இன் கீழ் மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த சபையின் 06 நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது சபையின் அரசியல்வாதிகள் மற்றும் சபையின் அலுவலர்களின் 02 வெளிநாட்டு சுற்றுலாக்கள் மேற்கொண்டிருந்தனர். அத்துடன், அதற்காக ரூபா 4,345,969 இற்கான செலவொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டடிருந்தது.

3.2 முகாமைத்துவ திறமையின்மை

---

பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் 2008 – 2010 காலப்பகுதியில் அங்கீகரித்திருந்த கட்டட விண்ணப்பங்கள் 1103 இருந்த போதும், இணக்கச் சான்றிதழ்கள் 84 மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. 1019 விண்ணப்பங்களுக்கு இணக்கச் சான்றிதழ் பெறப்படாமை அல்லது கட்டட அனுமதிப்பத்திரத்தின் காலத்தை நீடித்தல் மேற்கொள்ளப்படாமை தொடர்பாக சபையினால் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. அந்த கட்டடங்கள் அனைத்தும் நிர்மாணிக்கப்பட்டிருந்தால், துணை விதியின் பிரகாரம் ரூபா 254,750 இற்கான கட்டட இணக்கச் சான்றிதழ் வருமானம் ஒன்றும், நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்படாவிடின் அனுமதிப்பத்திரத்தின் காலத்தை வருடாந்தம் கால நீடிப்பு கட்டணம் ஆக ரூபா 395,000 இற்கான வருமானம் ஒன்று சபைக்கு உழைக்க கூடியதாக இருந்தது.

(ஆ) வெல்லவ பொதுச் சந்தை என பயன்படுத்தப்பட்டிருந்த கட்டடத்தை சபையினால் வெல்லவ பொலிஸ் நிலையத்திற்காக மாதாந்த வாடகை ரூபா 1,775 இற்கான பல வருட காலத்திற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்தது. அதன் விபரங்கள் அடங்கிய கோவை ஒன்று பிரதேச சபையில் காணக் கூடியதாக இருக்கவில்லை. தற்போது அக்காணியை வெல்லவ பொலிஸ் நிலையத்தினால் காணியை உரித்தாக்குவதற்காக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் சபைக்கு காணியின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக தேவையான ஆவனங்கள் இன்மையால் அக்காணியை இழக்கக் கூடிய அபாயம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

---------------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக பாதீட்டின் பிரகாரம் ஏனைய வருமானங்கள் தவிர ரூபா 133,205,094 இற்கான வருமானம் ஒன்று மதிப்பீடு செய்திருந்த போதும், அவற்றில் நெருங்கியிருந்தது நூற்றிற்கு 35 ஆகிய ரூபா 46,034,668 மாத்திரமே. அதே போல் மூலதன வருமானத்தின் கீழ் ரூபா 80,000,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அவற்றில் நெருங்கியிருந்தது நூற்றிற்கு 1 ஆகிய ரூபா 941,701 மாத்திரமே.

5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்